சூரியவெவ பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

சூரியவெவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சூரியவெவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் காசுப்பாய்ச்சலும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,

புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 இணங்காமை

1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)	2017 ஆண்டு 02 பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்கண்டு 1918 ஆதனங்களை வீதவரி அறவீடு செய்வதற்காக வெளியிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆதனங்களில் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபையின் வருமானத்தை விரிவாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தது.	பெறுமான மதிப்பீடு கிடைத்த பின்னர் வீதவரி அறவீடு நடவடிக்கை எடுக்கப்படும் என.	முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டிருந்த இரண்டு பிரிவுகளில் வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	தென் மாகாண, உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05	அனைத்துக் கடை அறை வாடகை உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 05 கடையறைகள் அவ்வாறு நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை.	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்த பின்னர் உடன்படிக்கைகளை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றறிக்கையின் குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடையறைகளின் உடன்படிக்கைகளை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்க்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4.82 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 16.37 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	2,078,000	1,870,000	1,935,965	28,070	2,131,000	2,921,420	2,987,555	94,035
வாடகை	30,459,400	28,330,000	32,256,056	2,063,830	41,775,500	45,733,014	51,963,710	5,989,886
அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,493,100	1,893,150	1,999,350	2,000	1,379,000	1,695,600	2,474,175	108,200
ஏனைய வருமானங்கள்	3,634,500	4,616,932	6,704,747	492,950	4,718,500	4,221,076	6,479,466	2,580,765
மொத்தம்	**37,665,000**	**36,710,082**	**42,896,118**	**2,586,850**	**50,004,000**	**54,571,110**	**63,904,906**	**8,772,886**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 8.77 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 36.71 தொகையாக காணப்பட்டது. அதன்படி, ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 45.48 மில்லியன் தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 42.90 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால், வருமானம் சேகரித்தின் முன்னேற்றம் 94 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.	வருமான மதிப்பீடு தயாரித்தல் மிகவும் சரியாக மேற்கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	பெற்றுக்கொண்ட முன்னேற்றத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்ல வேண்டும்.

2.2.3 வாடகை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 மற்றும் 2021 ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் 06 வாடகை ஆதனங்களிலிருந்து 1.30 மில்லியன் தொகையொன்று அறவீடு செய்திருக்கவில்லை.	2021 ஆண்டிற்குரிய நிலுவைக்காக பதவழிப்பதற்கான ஆங்கீகாரம் கிடைத்த பின்னர் மீதியான நிலுவைப் பாதுகாப்பு பிணைத் தொகையிலிருந்து எதிரீடு செய்யப்பட்டிருந்தது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் 48 கடைகளில் இருந்து ரூபா 704,131 இற்கான கடையறை வாடகை மற்றும் தண்டப்பணம் நிலுவையாக காணப்பட்டதுடன், இந்த நிலுவைத் தொகையில் ரூபா 230,950 தொகை 2019 ஆண்டிற்கு முனனர் இருந்து காணப்படும் மீதிகளாகும். சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க அந்தப் பணம் அறவீடு செய்திருக்கவில்லை.	மொத்த நிலுவையில் ரூபா 185,838 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதுடன், மற்றும் அறவீடு செய்ய முடியுமான மீதித் தொகையை அறவீடு செய்வதற்கும், அறவீடு செய்ய முடியாத தொகையை பதிவழிப்பதற்கும் அனுப்பப்பட்டுள்ளது என.	சட்டத்தின் பிரிவு 159(1) பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும்.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபையில் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண மீதிகள் முறையே ரூபா 3.19 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1.30 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், பெற வேண்டிய முத்திரைக் கட்டண மீதியில் 2023 ஆண்டிற்குரிய பெற வேண்டிய மீதி ரூபா 836,406 தொகை காணப்பட்டது.	2023 ஆண்டிற்குரிய ரூபா 836,406 நிலுவைத் தொகையொன்று காணப்படுகின்றது என.	நிலுவை வருமானம் விரைவாக தருவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆண்டின் போது ஆபத்து விளைக்கக்கூடிய மரங்கள் தொடர்பாக கிடைத்திருந்த 71 முறைபாடுகளில் 44 முறைப்பாடுகளுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 107(1) இணங்க தீர்வு வழங்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அவை கிடைக்கப்பெற்ற முறைப்பாடு எண்ணிக்கை 62 சதவீதமாகும்.	தற்போது 29 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலும், 09 முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும். எல்லை வேலிகள் தொடர்பான 05 முறைப்பாடுளை தீர்க்க முடியாமல் உள்ளது என.	சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் விரைவாக தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டின் போது பாதைகளின் திருத்த வேலைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்காக 06 பிரிவுகளில் இருந்து 135 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவற்றில் 92 முறைப்பாடுகளை விசாரணை செய்திருக்கவில்லை. அவை கிடைக்கப்பெற்ற முறைப்பாடு எண்ணிக்கை 68 சதவீதமாகும்.	32 வேண்டுக்கோள்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், 103 வேண்டுகோள்களுக்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு எதிர் காலத்தில் அந்த வேண்டுகோளை நிறைவேற்றப்படும் என.	பொது மக்கள் முறைப்பாடுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	சபையின் 21 பிரிவுகளுக்குரிய தொடர்பாக 3347 வீதி விளக்குகள் காணப்பட்ட போதிலும், காட்டு யானையின் அச்சுறுத்தல் காரணமாக புதிய வீதி விளக்குகள் பொருத்தித் தரும்படி 2025 ஜனவரி 28 திகதியில் உள்ளவாறு 79 வேண்டுகோள்கள் 2023 ஜனவரி மாதம் முதல் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அதற்கான தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.	புதிய வீதி விளக்குகள் பொருத்துவதற்காக பல சந்தர்ப்பங்களில் பல தடவைகள் மின்சார சபைக்கு வேண்டுகோள் விடுத்த போதிலும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என. மற்றும் 79 வேண்டுகோள்களில் 21 தொடர்பாக புதிய வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது எனவும் மற்றும் மீதியான இடங்கள் தொடர்பாக தொடர்ந்தும் பரிசோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தேவைப்பாட்டினை இனங்கண்டு புதிய வீதி விளக்குகள் பொருத்துதல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 78(1) இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும், சபையின் அதிகாரப் பரிதேசத்தில் ஐந்து பொது மக்கள் சுகாதாரப் பிரிவுகள் அடங்கக்கூடிய விதமாக டெங்கு நோய் கட்டுப்படுத்தும மற்றும் விசர் நாய் கடி நோயை தடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பல்வேறு காரணங்களினால் 05 சுகாதார பரிசோதகர் பிரிவுகள் அடங்கும் விதமான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு முடியாமல் போனது என.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மதுனாகல குப்பை செயற்திட்ட வளாகததிற்கு தேவையான நீரினை பெற்றக்கொள்வதற்காக குழாய்க் கிணறு நிர்மாணிப்பதற்காக தேசிய வடிகாலமைப்புச் சபையின் மாத்தறை நிலக்கீழ் நீர்ப் பிரிவிற்கு புவிச் சரிதவியல் ஆய்வு மேற்கொள்ளும் படி 2024 நவம்பர் 18 திகதி ரூபா 46,846 தொகையும், குழாய் கிணறு நிர்மாணிப்பதற்கு 2024 நவம்பர் 27 திகதி ரூபா 553,302 தொகைக்கான	குழாய் கிணறொன்று நிர்மாணிக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும், தோல்வியடையும் சந்தர்ப்பங்களும் முகங்கொடுக்க நேரடிடுகின்றது. அதன் காரமாண குழாய் கிணறு தோல்விவடைந்த	புவிச் சரிதவியல் அறிக்கையில் அடங்கிய விடயங்களை ஆய்வு செய்து செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

மதிப்பீட்டுப் பெறுமதியொன்றும் என மொத்தம் ரூபா 600,148 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த புவிச்சரிதவியல் அறிக்கையின் படி 115 மீற்றர் ஆழம் வரை கணிசமான நீர் எண்ணிக்கையொன்று காணப்படவில்லை எனவும், அதன் உட்பகுதியில் பாறையொன்று அமைந்துள்ளமையால் எதிர்பார்க்கும் அளவு இந்த குழாய் கிணறின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது எனவும், நீர் தேவைப்பாட்டினை கவனம் செலுத்தி 65 மீற்றர் வரை துளையிடும் முறையூடாக மேற்கொள்ளல் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கொடுப்பனவு மேற்கொண்டு குழாய் கிணறு நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அதில் நீர் காணப்படாமையால், தோல்வியடைந்திருந்தது எனவும், அதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 281,296 தொகைக்கான திருப்பிச் செலுத்தப்படாத 50 சதவீதத் தொகை விளைவற்றதாகியுள்ளது.	செயற்திட்டமொன்றான காரணத்தினால் அதற்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்றுக் காணப்பட்ட போதிலும், அது தவிர்க்க முடியாததொரு விடயமாகும் என.	

3.3 முகாமைத்துவ திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2021 ஜூலை 08 திகதிய மற்றும் 2235/54 இலக்கம் கொண்ட வர்த்தமானியில் பிரிவுகள் 30(1), 30(2) மற்றும் (3) பிரகாரம் பிரதேச சபையினால் 2023 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 30 கட்டிட வரைபுகளுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் காலத்தை நீடிப்பதற்கு அல்லது நிர்மாண வேலை முடிவடைந்திருந்தால் இசைவுச் சான்றிதழ் வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	01 முடிவடைந்த பின்னர் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கும், வேலை பூரத்தி செய்யப்பட்ட பின்னர் இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் படி நினைவூட்டப்பட்டதுடன், அந்த கால நீடிப்புக்காக ரூபா 9,500 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது என.	குறிப்பிட்ட வர்த்தமானியின் பிரிவுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டிட வரைபுகளில் கால நீடிப்பு அல்லது இசைவுச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆண்டின் போது வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 113 வியாபார	பொது மக்களின் சுகாதார பரிசோதகரின் பரிந்துரைகள் கிடைத்திருக்காமையால்,	அனுமதிப்பத்திரம் வழங்க கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை

	அலகுகளுக்காக பரிந்துரை வழங்கப்பட்டிருக்காததுடன், தேவையான தகைமைகளை பூர்த்தி செய்து அனுமதிப்பத்திரங்களை வழங்கி கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க முடியாது எனவும் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் பரிந்துரை கிடைப்பதில் தாமதங்கள் காணப்படுகின்றது என.	எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டிற்குரிய மேற்கொள்ளப்பட்ட வியாபார கணிப்பீட்டின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 04 கைத்தொழில்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2025 ஜனவரி 28 திகதி அளவிலும், அவற்றிறகு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் 2022 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வியாபார கணிப்பீட்டின் படி இனங்காணப்பட்ட 25 வியாபார நிறுவனங்களுக்காக இதுவரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால், அந்த வியாபாரத்தின் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய சேதம் தொடர்பாக ஒழுங்குறுத்தல் ஒன்று மற்றும் சபை நிலையத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் ஒன்றை இழந்திருந்தது.	2024 ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் மற்றும் பெற்றுக் கொள்ளாவிடின் வழக்குத் தாக்கல் செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நிறுவனங்களுக்கு மற்றும் 2023 ஆண்டிற்குரிய 04 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் மீதியான நினைவூட்டல் கடிதங்களும் மற்றும் பரிசோதனை கட்டணம் செலுத்தும் படியும் குறைபாடுகள் நிறைவேற்றிக்கொள்ளும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது என.	சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கி கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2010 ஆண்டு சூரியவெவ சிறுவர் பூங்கா வளவில் 04 கடையறைகள் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டு அதற்காக செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டு டென்டர் மூலம் பெறுவோர்களிடம் கிடைக்கக்கூடிய ஒரே தடவையில் பெறும் பணத்தை அடிப்டையாகக் கொண்டு மற்றும் மீதித் தொகையை சபை நிதியத்திலிருந்த பயன்படுத்துவதற்கும் சபையின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் உரிய முறையில் செய்தித்தாள் அறிவித்தல் மேற்கொள்ளப்படாமை, குறிப்பிட்ட	கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.	முறையான விசாரணை மேற்கொண்டு சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கும் மற்றும் சபையின் ஆதனங்களை விளைவற்று வைக்காமல் வருமானம் உழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலப் பதிகளில் முறைப் பிரகாரம் டென்டர்தாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 04 கடையறைகளுக்காக சபையினால் மற்றும் டென்டர்தாரர்களின் பணத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2.22 மில்லியன் தொகையும், சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக மாறியிருந்ததெனவும், முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காத அறிவித்தல் வெளியிடும் கட்டணம் ரூபா 12,096 தொகையும், உடன்படிக்கை காலத்தினுள் கடையறைகள் நிர்மாணித்து ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்படைக்காத காரணத்தினால் ஏற்பட்டிருந்த வழக்கு அலுவல்களுக்காக 2025 ஜனவரி 28 திகதி வரை செலுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1.46 மில்லியனிற்கான வழக்குக் கட்டணமும் 08 வருடத்திற்காக மிகையான காலம் 04 கடையறைகள் விளைவற்றுக் காணப்பட்டதால் கடை அறை வாடகை வருமானமுமாக மொத்தம் சபைக்கு கூட்டுத்தொகை ரூபா 3.69 மில்லியனிற்காக நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.		

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 168 காணிகள் மற்றும் 11 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமை 2024 திசெம்பர் 31 திகதி வரை சபைக்கு உரித்தாக்கிக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணிகளை உரித்தாக்கிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	சபைக்குச் சொந்தமான 168 காணிகள் மற்றும் 11 கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையான உரித்தாக்கிக்கொள்ள விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபைக்கு சொந்தமான இரண்டு டிபர் வண்டிகளின் மைலோ மீற்றர்கள் முறையே 2021 ஆகஸ்ட் 10 மற்றும் 2023 ஆகஸ்ட் 10 ஆகிய நாட்கள் முதல் செயற்படாது காணப்பட்ட போதிலும், அவற்றை திருத்துவதற்காக 2025 ஜனவரி 28 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திருத்த வேலைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உபகரணங்கள் இந்த வாகனங்களுக்கு பொருந்தாமையால் வழங்கல் விடயத்திற்காக இந்த மீட்டர் பலகை கொள்வனவு செய்வதற்கு தகவல்கள்	வாகனத்தின் மைலோ மீற்றர் உரிய நிலைமைக்கு ஆக்கி எரிபொருள் பாவணை தொடர்பாக கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும்.

அதன்படி, அந்த வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பாக முறையான பகுப்பாய்வொன்று மேற்கொள்ள முடியாமல் இருந்தது என அவதானிக்கப்பட்டது.	அனுப்பப்பட்டுள்ளது.	

3.7 ஒப்பந்த நிருவாகம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஹம்பாந்தோட்டை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் மாவட்ட பொறியியலாளரின் HACLG/DEV/ 01/COH இலக்கம் 2024 மே 22 திகதிய கடிதத்தின் மூலம் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் 2024 ஆண்டிற்கான கொங்கிரீட் துண்டுக் கற்கள் பாதைகளின் கொங்கீரிட் வடிவமைப்பு வேலைகளுக்காக (curb formwork) பயன்படுத்தக்கூடிய விஷேட விலை ரேட்கள் (SSR) தயாரிக்கப்பட்டிருநத போதிலும், 2024 ஆண்டில் சபையினால் நிறைவேற்றப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மூன்று நிர்மான வேலைகள் தொடர்பாக மேற்கூறிய வேலை விடயத்திற்காக தென் மாகாண கட்டிட கூறுவிலைகள் ரூபா 1,850 இற்கான (FW04) ரேட்கள் பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 243,367 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பாதைக்காக கொடுப்பனவு செய்யும் போது விஷேட ரேட் தொடர்பாக அறிந்திருக்கவில்லை எனவும் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள் 10 சதவீத தடுத்து வைத்தல் பணத்தை திருப்பி செலுத்தும் போது மிகையாக செலுத்திய பணத்தை அறவீடு செய்யப்படும் எனவும்.	சரியான ரேட் அடிப்படையில் நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

3.8 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் 09 பதவிகளுக்குரிய 19 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலவுகின்ற அரச கொள்கைசார் தீர்மானங்களின் படி உரிய பதவிகள் ஏற்படுத்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது என.	சபையின் பதவி தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	இலக்கம் 01/2020 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் நி.பி. 113(6)(ஆ) பந்திகளுக்கு இணங்க முற்பண "பீ" கணக்கின் மூலம் வழங்கியிருந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் பண ரீதியாக நட்டம் ஏற்படல், அரசாங்கம்	நிலுவைத் தொகையை துணையிடம் அறவீடு செய்வதற்தகு வலைய கல்வி அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	குறிப்பிட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நிலுவை கடன் மீதிகள் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்பார்க்காமையால் அந்தக் கடன்கள் அந்த முற்பணங்கள் திருப்பி அறவீடு செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2023 ஜூன் 07 திகதி முதல் வேலை இடை நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 250,418 இற்கான இடர் கடன் மற்றும் விழா முற்பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வீதவரி மற்றும் வரி வருமான உதவி 02 விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 14.26 மில்லியன் காணப்பட்டதுடன், அந்த முரண்கள் 10 சதவீதம் முதல் 23 சதவீதம் வரை காணப்பட்டது.	மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், களியாட்ட வரி வருமானம் குறைவடைதல் சம்பள மீளளிப்பு செலுத்தப்படாமை, மந்திரிமார் ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை இந்த முரணுக்கு காரணமாக இருந்தது என.	முரண்களை குறைப்பதற்கும், திட்டமிடலை முறைப்படுத்துவதற்கும், வருமானம் சேகரித்தலை செயற்திறனுடன் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மூலதனச் சொத்துக்களின் திருத்த வேலை மற்றும் பராமரிப்பு மற்றும் இரண்டு மூலதன செலவு விடயங்களின் பிரதிகூலமான முரண்கள் ரூபா 10.52 மில்லியன் காணப்பட்டதுடன், அந்த முரண்கள் 28 சதவீதம் முதல் 31 சதவீதம் இடையில் காணப்பட்டது.	திட்டமிடப்பட்ட மூலதன நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக செயற்திட்டங்கள் செயற்படுத்த முடிந்தமை மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்த வேலை செலவு மிகையாக மேற்கொள்ள நேரிட்டிருந்தது என.	முரண்களை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிதுடன், அதற்காக திட்டமிடலை முறைப்படுத்த வேண்டும்.

4.2 சுற்றாடச் சிக்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மதுனாகல திண்மக் கழிவுப் பொருள் நிலையத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்கக்கூடிய குப்பைகள் திறந்த சுற்றாடலுக்கு விடுவித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் சேதனப் பசளை செயற்களம் நிர்மாணித்து,	2025 ஆண்டிற்காக தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சேதனப் பசளை செயற்களம் தயாரிப்பதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால், சேதனப் பசளை	திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறைப் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும்.

	சேதனப் பசளை உற்பத்தி தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.	தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என.	
(ஆ)	2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த 2264/18 மற்றும் 2021 ஜனவரி 27 திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி சூரியவெவ பிரதேச சபையின் திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலையத்தில் காணப்படும் மலக் கழிவுப்பொருட்களை பொது சுத்திகரிப்பு முறையொன்றுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஏப்ரல் 17 திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்களினால் களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் விதிமுறைகளின் படி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்தை விரிவாக்கி தயாரித்தல் 100 சதவீதம் என முன்னேற்றம் காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அந்த செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் கிடைக்கக்கூடிய நிதியத்தை அறுதியாக இனங்கண்டு திட்டமிடப்படும் என.	திட்டமிடப்பட்ட கருமங்களை செயற்படுத்தி சரியான முன்னேற்றம் காட்டப்பட வேண்டும்.